# அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் புறக்குறிப்பு [அதிகாரங்கள் 1–28]

*இப்புறக்குறிப்பு, அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை அறிய உங்களுக்கு உதவும்.*

I. *எருசலேமில் சாட்சிகள் (1-7).*
- *அ. அதிகாரம் 1: காத்திருப்புக் காலம்.*
  1. *அறிமுகக் கூற்று (வ. 1, 2).*
  2. *பரத்துக்கேறுதல் (வ. 3-11).*
  3. *எருசலேமில் காத்திருத்தல் (வ. 12-14).*
  4. *யூதாஸுக்குப் பதில் வேறொருவர் தேர்ந்தெடுக்கப்படுதல் (வ. 15-26).*
- *ஆ. அதிகாரம் 2: சபை நிலைநாட்டப்படுதல்.*
  1. *வல்லமை இறங்குதல் (வ. 1-13).*
  2. *முதல் சுவிசேஷப் பிரசங்கம் (வ. 14-36).*
  3. *முதலாவதாக மனம் மாறியவர்கள் (வ. 37-41).*
  4. *ஆதி சபையைப்பற்றிய சுருக்கக் குறிப்பு (வ. 42-47).*
- *இ. அதிகாரம் 3: சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல்.*
  1. *சப்பாணியைக் குணப்படுத்துதல் (வ. 1-11).*
  2. *நிறைவு செய்யப்படாத ஒரு பிரசங்கம் (வ. 12-26).*

ஈ. அதிகாரம் 4: உபத்திரவங்களின் தொடக்கம்.
1. பேதுருவும் யோவானும் கைது செய்யப்படுதல் (வ. 1-31).
2. சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தல் (வ. 32-37).

உ. அதிகாரம் 5: சபை ஒழுங்கும் - அதிக உபத்திரவமும்.
1. சபை ஒழுங்கு பற்றிய முதலாவது நிகழ்ச்சி (வ. 1-11).
2. மதிப்பு வளருதல் (வ. 12-16).
3. இன்னும் அதிக உபத்திரவம் (வ. 17-42).

ஊ. அதிகாரம் 6: முதலாவது “உதவிக்காரர்கள்” தெரிந்து கொள்ளப்படுதல்.
1. சபையின் ஐக்கியம் குலையுமோ என்ற அச்சம்; ஏழு ஊழியக்காரர்கள் தேர்வு (வ. 1-7).
2. இவ்வூழியக்காரர்களில் ஒருவர் (ஸ்தேவான்) கைது செய்யப்படுதல் (வ. 8-15).

எ. அதிகாரம் 7: முதலாவதாக கிறிஸ்துவுக்காக மரித்தவர்.
1. ஸ்தேவானின் பிரசங்கம்: யூதர்களின் வரலாறு பற்றிய மறுகண்ணோட்டம் (வ. 1-53).
2. ஸ்தேவானின் மரணம் (வ. 54-60).

II. பலஸ்தீனத்தின் மற்ற பகுதிகளில் சாட்சிகள்: (8-12).

அ. அதிகாரம் 8: சபை சிதறடிக்கப்படுதல்.
1. சபையை சவுல் உபத்திரவப்படுத்துதல் (வ. 1-4).
2. சமாரியாவுக்குப் பிலிப்பு செல்லுதல் (வ. 5-25).
3. எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம் (வ. 26-40).

ஆ. அதிகாரம் 9: உபத்திரவம் கொடுத்த ஒருவரின் மனமாற்றம் - பேதுருவின் பயணங்கள்.
1. சவுலின் மனமாற்றம் (வ. 1-18).
2. சவுலின் தொடக்ககால ஊழியங்கள் (வ. 19-31).
3. பேதுருவின் மற்ற பயணங்கள் (வ. 32-43).

இ. அதிகாரம் 10: புறஜாதியாருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது (1).

1. ஒரு புறஜாதியான் (கொர்நேலியு) பேதுருவுக்கு ஆளனுப்புதல் (வ. 1-8).
2. பேதுருவின் தரிசனம் (வ. 9-23).
3. கொர்நேலியுவும் அவர் வீட்டாரும் மனம் மாறுதல் (வ. 24-48).

ஈ. அதிகாரம் 11: புறஜாதியாருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதல் (2).

1. குறை கூறியவர்களைப் பேதுரு சமாதானம் செய்தல் (வ. 1-18).
2. புறஜாதியாருக்கு சுவிசேஷம் பிரசங்கிக்கப் படுதல் (வ. 19-26).
3. யூதர்களுக்குப் புறஜாதியார் உதவுதல் (வ. 27-30).

உ. அதிகாரம் 12: ஜெபத்தின் வல்லமை.

1. ஏரோதினால் முதலாவது அப்போஸ்தலர் (யாக்கோபு) கொல்லப்படுதல் (வ. 1, 2).
2. ஏரோதினால் பேதுரு சிறையில் அடைக்கப் படுதல் (வ. 3-5).
3. ஜெபத்திற்குத் தேவன் பதில் அளிக்கிறார் (வ. 6-17).
4. ஏரோதின் மரணம் (வ. 18-24).
5. பர்னபாவும் சவுலும் சீரியாவின் அந்தி யோகியாவிற்குத் திரும்புதல் (வ. 25).

III. பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகள் (13-28).

அ. பவுலின் ஊழியப் பயணங்கள் (13-21).

1. அதிகாரம் 13: பவுலின் முதலாவது ஊழியப்பயணம் (1).
   - அ. பர்னபாவும் சவுலும், பரிசுத்த ஆவியானவரால் தேர்ந்தெடுக்கப்படுதல் (வ. 1-3).
   - ஆ. சீரியாவின் அந்தியோகியாவிலிருந்து சீப்புரு தீவுக்கு (வ. 4).
   - இ. சீப்புரு தீவில்: சாலமி மற்றும் பாப்போ பட்டணங்களில் (வ. 5-12).
   - ஈ. பெர்கே பட்டணத்திற்கு (வ. 13).

உ. பிசீதியாவின் அந்தியோகியாவுக்கு (வ. 14-52).

2. அதிகாரம் 14: பவுலின் முதலாவது ஊழியப் பயணம் (2).
   - அ. இக்கோனியாவில் (வ. 1-6).
   - ஆ. லீஸ்திராவில் (வ. 7-20).
   - இ. தெர்பையில் (வ. 21).
   - ஈ. திரும்பி வருதல் (வ. 21-28).
3. அதிகாரம் 15: எருசலேமில் ஒரு ஆலோசனைக் கூட்டம் - மற்றும் பவுலின் இரண்டாவது ஊழியப் பயணம் (1).
   - அ. மோசேயின் பிரமாணத்திற்குப் புறஜாதிக் கிறிஸ்தவர்களைக் கீழ்ப்படியப் பண்ண வேண்டுமா என்பது பற்றிய ஒரு வாக்குவாதம் (வ. 1, 2).
   - ஆ. எருசலேமில் ஒரு ஆலோசனைக் கூட்டம்; ஒரு கடிதம் எழுதப்படுதல் (வ. 3-29).
   - இ. பவுலும், பர்னபாவும், மற்றவர்களும் இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு, சீரியாவின் அந்தியோகியாவுக்குச் செல்லுதல் (வ. 30-35).
   - ஈ. முதலாவது பயணத்தில் நிலைநாட்டின சபைகளை மறுபடியும் சந்திப்பதற்கான விருப்பம்; பவுல் மற்றும் பர்னபாவுக்கிடையே கருத்து வேறுபாடு உண்டாகுதல் (வ. 36-39).
   - உ. பவுலும், சீலாவும் பவுலின் இரண்டாவது ஊழியப் பயணத்தைத் தொடங்குதல் (வ. 40, 41).
4. அதிகாரம் 16: பவுலின் இரண்டாவது ஊழியப் பயணம் (2).
   - அ. இன்னொரு பயணத்துணையாள் (தீமோத்தேயு) (வ. 1-3).
   - ஆ. "பட்டணங்கள் தோறும்" (வ. 4, 5).
   - இ. துரோவாவுக்கு: "மக்கெதோனியனி அழைப்பு" (வ. 6-10).
   - ஈ. மக்கெதோனியாவுக்கு கடல் பயணம்

(வ. 11, 12).

உ. பிலிப்பி பட்டணத்தில்: லீதியாளும் அவள் வீட்டாரும் மனமாற்றம் அடைதல் (வ. 13-15).

ஊ. பிலிப்பி பட்டணத்தில்: குறி சொல்லும் ஆவியையுடைய ஒரு பெண்ணைக் குணமாக்குதல், மற்றும் சிறையில் அடைக்கப்படுதல் (வ. 16-24).

எ. பிலிப்பி பட்டணத்தில்: சிறைச்சாலை அதிகாரியும் அவர் வீட்டாரும் மனமாற்றமடைதல் (வ. 25-34).

ஏ. பிலிப்பி பட்டணத்தில்: சிறைச்சாலையிலிருந்து விடுதலை (வ. 35-40).

5. அதிகாரம் 17: பவுலின் இரண்டாவது ஊழியப் பயணம் (3).

அ. தெசலோனிக்கே பட்டணத்துக்கு (1-10).

ஆ. பெரோயா பட்டணத்துக்கு: "நற்குணசாலிகளாய்" இருந்த ம க்கள் (வ. 11-15).

இ. அத்தேனே பட்டணத்துக்கு: பவுல் ஆவியில் வைராக்கியமடைதல் (வ. 16-21).

ஈ. அத்தேனே பட்டணத்தில்: மார்ஸ் மேடை (ஏரேபெகஸ்) பிரசங்கம் (வ. 22-34).

6. அதிகாரம் 18: பவுலின் இரண்டாவது ஊழியப்பயணம் (4) - மற்றும் பவுலின் மூன்றாவது ஊழியப்பயணம் (1).

அ. கொரிந்து பட்டணத்தில் ஒன்னரை ஆண்டுகள் (வ. 1-17).

ஆ. சீரியாவின் அந்தியோகியாவுக்குப் பவுல் திரும்புதல் - எபேசுவில் நிற்குதல் (வ. 18-22).

இ. மூன்றாவது ஊழியப் பயணத்தைத் தொடங்குதல் (வ. 23).

ஈ. சாதுரியவானான ஒரு பிரசங்கியாரின் அறிமுகம் (அப்பொல்லோ) (வ. 24-28).

7. அதிகாரம் 19: பவுலின் மூன்றாவது

*ஊழியப்பயணம் (2).*

*அ. எபேசு பட்டணத்தில்: பன்னிரண்டு சீஷர்கள் மறு ஞானஸ்நானம் பெறுதல் (வ. 1-7).*

*ஆ. எபேசு பட்டணத்தில்: பவுலின் ஊழியமும் மற்றும் திட்டங்களும் (வ. 8-22).*

*இ. எபேசு பட்டணத்தில்: எதிர்ப்புகள் (வ. 23-41).*

*8. அதிகாரம் 20: பவுலின் மூன்றாவது ஊழியப் பயணம் (3).*

*அ. மக்கெதோனியா, கிரேக்கு தேசங்களுக்குச் செல்லுதல், பின்பு மக்கெதோனியாவிற்கும், பிறகு துரோவாப் பட்டணத்துக்கும் திரும்பச் செல்லுதல் (வ. 1-6).*

*ஆ. துரோவாப் பட்டணத்தில்: கர்த்தருடைய நாள் ஒன்றில் கூட்டம் (வ. 7-12).*

*இ. எருசலேமுக்குப் பயணப்படும் வழியில் (வ. 13-16).*

*ஈ. மிலேத்துவில்: எபேசுவின் மூப்பர்களுடன் முக்கியமான உரை (வ. 17-38).*

*9. அதிகாரம் 21: பவுலின் மூன்றாவது ஊழியப்பயணம் (4) - மற்றும் எருசலேமில் பவுல் கைது செய்யப்படுதல்.*

*அ. எருசலேம் செல்லும் வழியில் - தீரு, பித்தொலோமாய் மற்றும் செசரியா பட்டணங்களில் நிற்றல் (வ. 1-17).*

*ஆ. விமர்சனத்தைத் தவிர்ப்பதற்குப் பவுல் முயற்சி செய்தல் (வ. 18-26).*

*இ. பவுல் கைது செய்யப்படுதல் (வ. 27-36).*

*ஈ. தற்காப்பு வாதம் செய்ய ஒரு தருணம் (வ. 37-40).*

*ஆ. பவுல் சிறை வைக்கப்படுதல்களும் மற்றும் அவரது ரோமாபுரிப் பயணமும் (22-28).*

*1. அதிகாரம் 22: எருசலேமில் பவுல் சிறை வைக்கப் படுதல் (1).*

*அ. பவுலின் தற்காப்பு வாதம் (வ. 1-22).*

*ஆ. சிக்கலில் அகப்பட்ட ஒரு சேனாபதி (வ. 23-30).*

*2. அதிகாரம் 23: எருசலேமில் பவுல் சிறை வைக்கப் படுதல் (2) - மற்றும் செசரியாவில் பவுல் சிறை வைக்கப்படுதல் (1).*

*அ. சனதெரீன் சங்கத்தாரின் முன்பாகப் பவுல் (வ. 1-10).*

*ஆ. ஊக்கமூட்டும் ஒரு தரிசனம் (வ. 11).*

*இ. ஒரு கொலைச் சதித் திட்டம் வெளியாக்கப்படுதல் (வ. 12-22).*

*ஈ. பவுல் செசரியாவுக்குக் கொண்டு செல்லப்படுதல் (வ. 23-35).*

*3. அதிகாரம் 24: செசரியாவில் பவுல் சிறை வைக்கப்படுதல் (2).*

*அ. பேலிக்ஸ் முன்பாக விசாரணை (வ. 1-23).*

*ஆ. "எனக்குச் சமயமானபோது": பேலிக்ஸ் மனமாற்றம் அடையாமை (வ. 24-27).*

*4. அதிகாரம் 25: செசரியாவில் பவுல் சிறை வைக்கப்படுதல் (3).*

*அ. பெஸ்துவின் முன்பாக விசாரணையில் பவுல், இராயருக்கு அபயமிடுதல் (வ. 1-12).*

*ஆ. செசரியாவுக்கு இரண்டு பார்வையாளர்கள் வருதல்; பிரசங்கிக்க இன்னொரு வாய்ப்பு (வ. 13-27).*

*5. அதிகாரம் 26: செசரியாவில் பவுல் சிறை வைக்கப்படுதல் (4).*

*அ. அகிரிப்பா ராஜாவின் முன்னிலையில் தமது தற்காப்பு வாதத்தில் பவுல், ஏன் மனமாற்றமடைந்தார் என்று கூறுதல் (வ. 1-27).*

*ஆ. "கொஞ்சங் குறைய சம்மதிக்கப் பண்ணுகிறாய்" அகிரிப்பா இராஜா மனமாற்றம் அடையாமை (வ. 28, 29).*

*இ. அடுத்த நிறுத்தம்: ரோமாபுரி (வ. 30-32).*

*6. அதிகாரம் 27: பவுலின் ரோமாபுரிப் பயணம் (1).*

*அ. பயணம் தொடங்குதல் (வ. 1-8).*

*ஆ. பவுலினால் எச்சரிக்கப்படுதல் (வ. 9-12).*

*இ. கடலில் ஆபத்தான நிகழ்ச்சிகள் (வ. 13-44).*

*7. அதிகாரம் 28: பவுலின் ரோமாபுரிப் பயணம் (2).*

*அ. ஒரு தீவில் துணிவான செயல்கள் (மெலித்தா) (வ. 1-10).*

*ஆ. பயணத்தைத் தொடருதல்; ரோமாபுரியை அடைதல் (வ. 11-16).*

*இ. விசாரணைக்காகக் காத்திருத்தல் (வ. 17-31).*

## முடிவுரை

*அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் பின்வரும் ஒரு வெற்றிக் குறிப்புடன் முடிவடைகின்றது: "பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷ முழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்" (அப். 28:31)!*